III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR

AT POONAMALLEE

O.S. 127/2017

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 07-12-2021

| | | | |
|---|---|---|---|
| Name | :K.K.Ramesh | Caste | : |
| Father's/Husband's Name | :K.Kannan | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

- **குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய வழக்குரையுடன் எஸ்.டி.சி.152/2015 என்ற வழக்கின் புகார் நகலை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த புகார் நகல் வா.சா.ஆ.21 ஆகும். அந்த புகார் நகலில் நான்காவது பத்தியில் 17/07/2014 தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை 22/07/2014 தேதியில் பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால சரிதான். எட்டு தவணைகளில் பிரதிவாதியின் மனைவி என்னிடம் பணம் பெற்றுக்கொண்டதாக மேற்சொன்ன வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. 17/07/2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகலை ஆவணமாக குறியீடு செய்யவில்லை. அந்த அறிவிப்பை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி அனுப்பினேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் 17/07/2014 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். வேண்டுமென்றே தான் அந்த அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். பிரதிவாதியின் மனைவி பணம் பெற்றுக்கொண்டதாக கூறப்படும் எட்டு தவனைகளில் நான்கு தவனைகள்

17/07/2014 தேதியிட்ட அறிவிப்பிற்கு பின்னிட்ட தேதிகள் என்றால் சரியல்ல. இது குறித்த விவரங்கள் என்னுடைய வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடிப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். பின்னிட்டு கொடுக்கப்பட்ட பணம் பற்றிய விவரத்தை முன் தேதியில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்ல முடியாது என்றால் சரிதான். எனவே பொய்யான வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 20/10/2014 மற்றும் 14/11/2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்புகள் வ.சா.ஆ.14 மற்றும் 16 என்றால் சரிதான். 14/11/2014 தேதியிட்ட அறிவிப்பில் ரூ.1,00,000/- பஞ்சவர்ணமும் ரூ.14,00,000/- அவருடைய மனைவியும் வாங்கியதாக குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அந்த அறிவிப்பில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 20/10/2014 தேதியிட்ட அறிவிப்பில் ரூ.15,00,000/- தொகையை பஞ்சவர்ணம் வாங்கியதாக குறிப்பிட்டு ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக அனுப்பினேன். பிரதிவாதி தரப்பில் 22/09/2015 தேதியில் ஒரு பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.20 என்றால் சரிதான். இந்த வழக்கில் அடமான கடனை திருப்பி தருமாறு பரிகாரம் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அடமானம் என்பது இல்லை என்றாலும் அதனால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. மாற்று முறை ஆவண சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 45/2016 (152/2015) என்ற வழக்கு விரைவு நீதித்துறை நடுவர் மன்றத்தில் தள்ளுபடி செய்யபட்டு தற்போது உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. பிரதிவாதியின் மனைவியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. தேவைப்பட்டால் சேர்ப்பேன். பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை நீதிமன்றத்தில் கூறியிருப்பதாகவும் அதனால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.